CHURCH OF THE
HOLY FAMILY
KAJANG

ஜூலை 7 2020

கிறிஸ்துவில் அன்பார்ந்தவர்களே,

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் தேவாலயங்கள் திருப்பலி கொண்டாடத்திற்கு மீண்டும் திறக்கப்படுவதை முன்னிட்டு, நம்மில் அநேகர், காஜாங் திருக்குடும்ப தேவாலயத்தில் திருப்பலியில் கலந்துக்கொள்ள மிகவும் ஆவலுடன் இருப்பதை நாங்கள் அறிவோம்.

தற்போது, ஜூலை 19 ஞாயிறன்று காலை 10 மணிக்கு திருப்பலி கொண்டாடப்பட ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அனைவரும் திருப்பலி நடைப்பெறும்போது, ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதிப்படுத்தும் தயாரிப்புப் பணியில் தன்னார்வலர்கள் மற்றும் ஆலோசகர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

முதல் திருப்பலி கொண்டாட்ட ஏற்பாட்டில் தவறுகள் ஏற்பட்டால்; தொடர்ந்து வரும் வாரங்களில் பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்க அடுத்த திருப்பலிகளுக்கான தேதி ஒத்திவைக்கப்படலாம்.

வயது, உடல்நலம் மற்றும் மன ரீதியாலும் உடல் ரீதியாலும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் மற்றும் அதிகாரிகளால் இணைக்கப்பட்ட நடவடிகைகளுக்கான விதிமுறைகள் (SOP) ஆகியவற்றைக் கருத்தில் கொன்டு நமது திருக்குடும்பப் பங்கு மக்கள் அநேகர் திருப்பலியில் கலந்து கொள்ள இயலாது என்பதை நாங்கள் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

நடமாட்டக் கட்டுபாட்டு ஆணையத்தை (MCO) முன்னிட்டு தேவாலயங்கள் மூடப்பட்டதால், பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம், ஞாயிற்றுக்கிழமை திருப்பலிப்பலியில் கலந்து கொள்ள வேண்டிய கடமையில் இருந்து விசுவாசிகளை/இறைமக்களை விடுவித்துள்ளார். இந்த விடுவிப்பு தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

மாமறைமாவட்டதின் விசுவாசிகள் திருஅவையோடும் ஒருவருக்கொருவர் ஆன்மீக ஒன்றிப்பில் நிலைத்திருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கிலும், திருப்பலி கொண்டாட்டத்தில் பங்குபெற இணையத்தளத்தில் தொடர்ந்து நேரடி ஒலிப்பரப்பு செய்யப்படும்.

திருப்பலிக்குப் பதிவுச்செய்ய விரும்பும் பங்கு மக்களுக்கு முக்கியமான அறிப்புக்கள் பின்வருமாறு. இந்த நடவடிக்கைகள், அதிகாரிகள் மற்றும் மாமறைமாவட்டத்தின் தற்போதைய வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் அவை மாற்றத்திற்கு உட்பட்டவை என்பதையும் நினைவில் கொள்வது அவசியம்.

**பதிவு செயல்முறை**

- திருப்பலிப்பலி பதிவுக்கு எங்கள் வலைத்தளமான www.hfckajang.org.my இல் இயங்கலையில் (ஆன்லைனில்) ஒளிபரப்பாகும். திருப்பலிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு பதிவு போர்டல் (portal) வாயிலாக மேற்கொள்ளப்ப்டும். எங்கள் வலைதளமானது, சமூக ஊடகங்க்ள மற்றும் எங்கள் Telegram

account@https//t.me/holyfamilykajang ஆகியவற்றில் அறிவிக்கப்படும்.

- கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் தற்போதைய வழிகாட்டியின் படி, 13 முதல் 69 வயதுடைய பங்கு மக்கள் மட்டுமே பதிவுச்செய்ய அனுமதிக்கப்படுவர். வெற்றிகரமாகப் பதிவுச் செய்தவர்கள் வாட்ஸ்அப் வழியாக கூடுதல் வழிமுறைகளைப் பெறுவார்கள். காய்ச்ச்சல், இருமல்,தொண்டை வலி, சுவாச பிரச்சினைகள், சளி போன்ற அறிகுறிகளைக் கொண்டவர்கள் தேவாலயத்தின் திருப்பலியில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நீரிழிவு நோய், புற்று நோய் மற்றும் உங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய மற்ற பிரச்சனைகள் உள்ளவர்கள் திருப்பலியில் கலந்துக்கொள்ள ஊக்குவிக்கப்படவில்லை.

- தேவாலயக் கட்டிடத்தில் 320 பங்கு மக்கள் மட்டுமே அமர அனுமதி உண்டு. ஆதலால், நாம் அடுத்தடுத்த திருப்பலிகளில் கலந்துக்கொள்ள வேண்டும். எனவே, பலர் அடுத்தடுத்தத் திருப்பலியில் கலந்துக்கொள்ள பல வாரங்கள் ஆகலாம். முதலில் பதிவுச்செய்வோருக்கு முதல் வாய்ப்பு வழங்கப்படும்.

- இது ஒரு பெரிய முயற்சியாகும், ஆதலால் சீரான நடைமுறைகள் வெற்றிகரமாக செயல்படுத்துவதை உறுதிப்படுத்த எங்களுக்கு தன்னார்வலர்கள் தேவைப்படுவார்கள். தன்னார்வலர்களுக்கான பதிவு எங்கள் பங்கு இணையதளத்தில் கிடைக்கும்.

## திருப்பலி பூசையில் கலந்துக்கொள்ள தயார்படுத்துதல்

- திருப்பலிப்பூசைக்கு உங்களுக்கு நியமிக்கப்பட்ட நாளில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், தயவுச்செய்து வீட்டிவேயே இருந்து விரைவில் மருத்துவ சிகிச்சை பெறுங்கள். மின்னஞ்சல் Email cominghome2hfc@gmail.com எதிர்வரும் திருப்பலிக்கு மாற்றியமைக்கும்.

- உங்கள் தொலைபேசியில் SELangkah அல்லது MySejahtera செயலி(app) பதிவுச்செய்து QR குறியீடு ஸ்கேனர் செயலியை(QR code scanner app) பதிவிறக்குங்கள். நீங்கள் தேவாலயத்திற்குள் நுழையும்போது பதிவு செய்ய இவை தேவைப்படும்.

CHURCH OF THE
HOLY FAMILY
KAJANG

**தேவாலயத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

- போதுமான முக. கவசங்கசங்களை கொண்டு வாருங்கள். அத்தோடு நற்கருணை பெறுவதற்கு முன்னும் பின்னும் கைகளை சுத்தம் செய்ய சொந்த கிருமி கொல்லி திரவத்தை (sanitizer) கொண்டு வாருங்கள். திருப்பலி தொடங்குவதற்குச் சற்று முன்பே தேவாலயத்தின் குளிர் சாதனம் அணைக்கப்படுவதால் கை விசிறியைக் கொண்டுவர விரும்பினால் கொண்டு வரலாம்.

- தேவாலயத்தின் உள்ளேயும் மற்றும் தேவாலய வளாகத்திலும் எல்லா நேரங்களிலும் முகக்கவசங்கள் அணியப்பட வேண்டும். சமூக இடைவெளியைப் பராமரிக்க வேண்டும். தேவாலயதில் இருக்கைகள் முன்பதாகவே ஒதுக்கப்படுவதால் அதை கடைபிடிக்க வேண்டும்.

- நீங்கள் தேவாலயத்திற்குள் நுழையும்போது அல்லது வெளியேறும்,போது அங்கே இருக்கும் பெட்டியில் காணிக்கை தொகையைப் போடவேண்டும். பங்கு மக்கள் மின்னியல் வாயிலாக்க் காணிக்கை அளிப்பது பரிந்துரைகப்படுகிறது. மேல் விவரங்கள் இங்கே கிடைக்கின்றன: http//www.hfckajang.org.my/bulletin/2020/04/22/keep-our-church-going.

- SELangkah அல்லது MySejahtera appயில் தேவையான விவரங்களை ஸ்கேன் செய்து பூர்த்தி செய்யவும். கோலாலம்பூர் மாமறைமாவட்டம் படிவத்தில் பூர்த்திச் செய்ய உங்கள் இருக்கையிலுள்ள QR codeடை ஸ்கேன் செய்யவேண்டும்.

- திருப்பலி பூசையின்போது மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்ட இறைவேண்டல் சொல்லும் போது விசுவாசிகள் கைகளைப் பிடிக்கக்கூடாது, ஒருவருக்கொருவர் அமைதி கூறுகையில் தொடுதல் தவிர்க்கப்பட வேண்டும். இயேசுவின் திரு உடலை பெற முன் வரும்போது முககவசத்தை அணிய வேண்டும், நற்கருணை கையால் பெறுவதற்கு சற்று முன்னரே முகக்கவசத்தை கீழே இறக்க வேண்டும்.

- தேவாலயத்தைச் சுத்தமாக வைத்திருப்பது நமது தனிப்பட்ட பொறுப்பு. திசு காகிதம், உணவு மற்றும் முகக்கவசம் போன்ற எந்த குப்பைகளையும் தேவாலயத்தில் விட்டு விடாமல் பார்த்துக்கொளுங்கள்.

- திருப்பலி முடிந்தவுடன் தயவுசெய்து உடனடியாக ஒரு ஒழுங்கான முறையில் தேவாலயத்தை விட்டு வெளியேற வேண்டும். மேலும் ஒன்று கூடுதலை தவிர்க்க வேண்டும். இந்த காலக்கட்டத்தில் தனிநபர்குக்குத் தனிப்பட்ட ஆசீர்வாதமும் குழந்தைகள் ஆசீர்வாதமும் இருக்காது.

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

- வழிமுறைகளின்படி கழிவறைகளின் பயன்பாடு அவசரநிலைகளுக்கு மட்டுமே.

தேவாலயங்கள் மீண்டும் திறப்பதாலும் பங்கு மக்கள் இறையில்லம் திரும்புவதாலும், செயல்முறைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நமது தேவாலயம் மற்றும் சமூகத்தின் பொது நன்மைக்காக, வார்டன்மார்கள் (ushers) கூறும் வழிமுறைகளைப் பின்பற்றவும். இல்லாவிட்டால் நமது திருக்குடும்பப் பங்கு மக்களின் ஆரோக்கியத்திற்கு தீங்கு ஏற்படலாம். இதன் விளைவாக தேவாலயத்தை மூடப்படக்கூடிய அவசியம் ஏற்படலாம்.

வரும் வாரங்களில் நீங்கள் கலந்து கொள்ளக்கூடிய திருப்பலிகள் நான்கு மாதங்களுக்கு முன்பு நீங்கள் நினைவில் வைத்திருந்த திருப்பலியிலிருந்து சற்று வேறுப்பட்டதாக இருக்கும். இந்த காலங்களில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது கட்டாயமாகும். இந்த நடவடிக்கைகளை நாம் கட்டுபாடுகளாகக் கருதக்கூடாது. மாறாக, அன்பு, புரிதல், பொறுமை மற்றும் கருணையோடு நம்பிக்கையுடன் வாழ வெளிப்படுத்தும் வாய்ப்பாக பார்க்க வேண்டும்.

வரும் நாட்களில் கூடுதல் தகவல்களைப் பெற எங்கள் அதிகாரப்பூவ வலைதளம், சமூக ஊடகங்கள் மற்றும் telegram account@https://t.me/holyfamilykajang ஆகியவற்றைக் கவனியுங்கள்.
உங்களிடம் ஏதேனும் கேள்விகள் அல்லது பரிந்துரைகள் இருந்தால், தேவாலய அலுவலகத்தை +03 87331154 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது comehome2hfk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும்.

நமது பங்கு மக்களை வீட்டில் விசுவாச ரீதியில் ஊக்கவிக்கவும், கிறிஸ்துவின் திரு உடலுடன் இணைக்கவும் இறையில்லம் திரும்பும் பங்கு மக்கள் பாதுக்காப்பாகவும் ஆரோக்கியமாக இருக்கவும், எங்கள் நாசரேத்து திருக்குடும்பத் தொடர் மன்றாட்டுக்களில் எங்களுடன் சேர்ந்து மன்றாடுங்கள்.

கிறிஸ்துவில் உங்கள்,
காஜாங் திருகுடும்ப தேவாலயம், பங்கு அருட்பணியாளர்கள்,
அருட்தந்தை என்ட்ரு கூய்,
அருட்தந்தை பிலிப் சுவா,
அருட்தந்தை வின்சன்ட் தோமஸ்.